30.08.2024 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி . (அ.வ..எண்.196 /2019) திரு.பெருமாள்சாமி

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

தபசில் சொத்து தெரியுமா என்றால் தெரியும் எந்த கிராமத்தில் என்ன சர்வே எண்,என்ன விஸ்தீரணம் என்றால் சரவணாபுரம் கிராமம், சர்வே எண்.1/12, 2 ஏக்கர் 11 செண்டு, மற்றொரு இடம் 1 ஏக்கர் 89 செண்டு. மீண்டும் சர்வே எண் மறந்துவிட்டது ஞாபகமில்லை என்று கூறுகிறார். சரவணாபுரம் கிராமம், சர்வே எண்.272/2 பி1, அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 10 செண்டு, சர்வே எண்.272/2 பி3 அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 88 செண்டு என்றால் சரிதான். சர்வே எண்.272 ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் 3 ஏக்கர் 99 செண்டு. நான் விஸ்தீரணத்தை தவறாக சொல்லுகிறேன் என்றும் சர்வே எண்.272 மொத்தம் 6 ஏக்கர் 42 செண்டு என்றால் தெரியாது. மொத்த சர்வே எண்.272 என்பது சர்வே எண்.272/2 பி1, 2 பி2,2 பி3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.272 ன் புல வரைபடத்தின் முதலில் 2 பி1,அதற்கு அடுத்து 2 பி2,அதற்கு அடுத்து 2 பி3 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது அதன் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர்ப 42 செண்டு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் வடபகுதியும், தென்பகுதியை பொறுத்து வழக்கு போட்டுள்ளேன் என்றும்மத்திய பகுதி சர்வே எண்.272/2 பி2 நாராயணசாமி என்பவர் வாங்கி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த மத்திய பகுதியை பொறுத்து தாவா இல்லை என்றால் சரிதான். மத்திய பகுதியை நாராயணசாமி யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்று தெரியுமா என்றால் தெரியும். இராமசாமி நாயக்கரிடமிருந்து. தாவாப்படும் சர்வே எண்.272/2 பி1,2 பி3 யார் பெயரில் கிரையம் பத்திரம் உள்ளது என்று தெரியுமா என்றால் பத்திரம் தெரியாது.

தாவாச்சொத்தை 28.08.1969 ல் பிரதிவாதிகளின் தகப்பனார் கந்தசாமி நாயக்கர் சரியான பிரதிபலத்துடன் பதிவு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இடத்தை லெட்சுமியம்மாள் தான் பணம்கொடுத்தார் என்பது தெரியும். அந்த விவரம் நாராயணசாமிக்கும் தெரியும். அனுபவமும் லெட்சுமியம்மாளிடம் இருந்து வந்தது. பட்டா மாற்றும் போது லெட்சுமியம்மாள் பெயருக்கு ஏற்பட்டுள்ளது. மால் விவரம் சொல்ல தெரியுமா என்றால் தெரியும் . சர்வே எண்.272/2 பி1–க்கு உட்பிரிவுக்கு அடுத்து தெற்கே சர்வே எண்.272/2 பி2 நாராயணசாமியால் கிரையம் வாங்கப்பட்ட இடம் என்றால் சரிதான். பிராது தபசிலி விவரிகப்பட்டுள்ள தபசில் சொத்தின் மால்கள் எனது கிரையப்பத்திரத்தினை பார்த்து தான் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் மாற்றங்கள் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 1வது தபசில் 1வது அயிட்ட சொத்து மால் விவரத்தில் நாராயணசாமி நாயக்கர் புஞ்சைக்கும் தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணசாமி இடத்திற்கு தெற்கு பக்கமும், வடக்கு பக்கமும் உள்ளது. தபசில் சொத்துக்களில் 1,2 தபசில் மால்கள் விவரம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. எனது பிராதில் குறிப்பிடப்ப்டுடள்ள சொத்து விவரமே தவறு என்பதால் எனது வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 3ம்பிரதிவாதி , இந்த பிரதிவாதிகளின் தகப்பனாரான கந்தசாமியின் மீது அ.வ.எண்.146/2014 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வழக்கின் 3ம்பிரதிவாதியிடமிருந்து தான் வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்ற ஜெயலலிதா என்பரையும் இந்த வழக்கில் 3ம்பிரதிவாதியாக கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி இந்த வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்து வருகிறார் என்றால் ச 30.08.2024 வா.சா.1 சாட்சி

மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி . (அ.வ..எண்.196 /2019) திரு.பெருமாள்சாமி

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

தபசில் சொத்து தெரியுமா என்றால் தெரியும் எந்த கிராமத்தில் என்ன சர்வே எண்,என்ன விஸ்தீரணம் என்றால் சரவணாபுரம் கிராமம், சர்வே எண்.1/12, 2 ஏக்கர் 11 செண்டு, மற்றொரு இடம் 1 ஏக்கர் 89 செண்டு. மீண்டும் சர்வே எண் மறந்துவிட்டது ஞாபகமில்லை என்று கூறுகிறார். சரவணாபுரம் கிராமம், சர்வே எண்.272/2 பி1, அதன் விஸ்தீரணம் 2 ஏக்கர் 10 செண்டு, சர்வே எண்.272/2 பி3 அதன்விஸ்தீரணம் 1 ஏக்கர் 88 செண்டு என்றால் சரிதான். சர்வே எண்.272 ன் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் 3 ஏக்கர் 99 செண்டு. நான் விஸ்தீரணத்தை தவறாக சொல்லுகிறேன் என்றும் சர்வே எண்.272 மொத்தம் 6 ஏக்கர் 42 செண்டு என்றால் தெரியாது. மொத்த சர்வே எண்.272 என்பது சர்வே எண்.272/2 பி1, 2 பி2,2 பி3 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.272 ன் புல வரைபடத்தின் முதலில் 2 பி1,அதற்கு அடுத்து 2 பி2,அதற்கு அடுத்து 2 பி3 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது அதன் மொத்த விஸ்தீரணம் 6 ஏக்கர்ப 42 செண்டு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் வடபகுதியும்,தென்பகுதியை பொறுத்து வழக்கு போட்டுள்ளேன் என்றும்மத்திய பகுதி சர்வே எண்.272/2 பி2 நாராயணசாமி என்பவர் வாங்கி அனுபவம்செய்து வருகிறார் என்றால் சரிதான். அந்த மத்திய பகுதியை பொறுத்து தாவா இல்லை என்றால் சரிதான். மத்திய பகுதியை நாராயணசாமி யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்று தெரியுமா என்றால் தெரியும். இராமசாமி நாயக்கரிடமிருந்து.தாவாப்படும் சர்வே எண்.272/2 பி1,2 பி3 யார் பெயரில் கிரையம் பத்திரம் உள்ளது என்று

தெரியுமா என்றால் பத்திரம் தெரியாது. தாவாச்சொத்தை 28.08.1969 ல் பிரதிவாதிகளின் தகப்பனார் கந்தசாமி நாயக்கர் சரியான பிரதிபலத்துடன் பதிவு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இடத்தை லெட்சுமியம்மாள் தான் பணம்கொடுத்தார் என்பது தெரியும். அந்த விவரம் நாராயணசாமிக்கும் தெரியும். அனுபவமும் லெட்சுமியம்மாளிடம் இருந்து வந்தது. பட்டா மாற்றும் போது லெட்சுமியம்மாள் பெயருக்கு ஏற்பட்டுள்ளது. மால் விவரம் சொல்ல தெரியுமா என்றால் தெரியும் . சர்வே எண்.272/2 பி1–க்கு உட்பிரிவுக்கு அடுத்து தெற்கே சர்வே எண்.272/2 பி2 நாராயணசாமியால் கிரையம் வாங்கப்பட்ட இடம் என்றால் சரிதான். பிராது தபசிலி விவரிகப்பட்டுள்ள தபசில் சொத்தின் மால்கள் எனது கிரையப்பத்திரத்தினை பார்த்து தான் டைப் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் நான் மாற்றங்கள் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 1வது தபசில் 1வது அயிட்ட சொத்து மால் விவரத்தில் நாராயணசாமி நாயக்கர் புஞ்சைக்கும் தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணசாமி இடத்திற்கு தெற்கு பக்கமும், வடக்கு பக்கமும் உள்ளது. தபசில் சொத்துக்களில் 1,2 தபசில் மால்கள் விவரம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. எனது பிராதில் குறிப்பிடப்ப்டுடள்ள சொத்து விவரமே தவறு என்பதால் எனது வழக்கு நிலை நிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 3ம்பிரதிவாதி , இந்த பிரதிவாதிகளின் தகப்பனாரான கந்தசாமியின் மீது அ.வ.எண்.146/2014 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வழக்கின் 3ம்பிரதிவாதியிடமிருந்து தான் வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். நான் கிரையம் பெற்ற ஜெயலலிதா என்பரையும் இந்த வழக்கில் 3ம்பிரதிவாதியாக கட்சி சேர்த்துள்ளேன்

என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி இந்த வழக்கில் தோன்றா தரப்பினராக இருந்துவருகிறார் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி– வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. ரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி– வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C..கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
30.08.2024.